BP-335

**605 / 17**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள் - A17



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

/ 90




பெற்றோர் கையொப்பம் : ____________________

A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1. மாணவர்கள் தங்கள் பள்ளிக் ________________ மதித்து நடந்தனர்.

(1) கொள்கைகளுக்கு
(2) கொள்கைகளை
(3) கொள்கைகளின்
(4) கொள்கைகளோடு ( )

Q2. தென்கிழக்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் நீச்சலில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்று ________________ பெருமை சேர்த்தார் திரு ஆங்.

(1) சிங்கப்பூரில்
(2) சிங்கபூசாறிலிருந்து
(3) சிங்கப்பூரின்
(4) சிங்கப்பூருக்கு ( )

Q3. கஞ்சத்தனம் மிகுந்த ________________ நன்கொடை பெறுவது இயலாத காரியம் என்று மக்கள் அறிந்திருந்தனர்.

(1) அவர்
(2) அவருக்கு
(3) அவரிடமிருந்து
(4) அவரால் ( )

Q4. ________________ பல நோய்கள் பரவுவதைக் தடுக்க அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

(1) கொசுக்களுக்கு
(2) கொசுக்களால்
(3) கொசுக்களின்
(4) கொசுக்களுடைய ( )

Q5. "________________ எதிர்காலம் உங்கள் கைகளில் உள்ளது" என்று கூறி தன் உரையை முடித்தார் தலைமையாசிரியர்.

(1) மாணவர்களது
(2) மாணவர்களே
(3) மாணவர்களில்
(4) மாணவர்களை ( )

## A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி ____________
கற்றனைத் தூறும் அறிவு.

(1) மந்திரிக்கு
(2) மாந்தர்க்கு
(3) செல்வாக்கு
(4) உண்டிக்கு ( )

Q7. ________________ உடையார் இகழ்ச்சி அடையார்.

(1) மனம்
(2) சோர்வு
(3) ஊக்கம்
(4) முயற்சி ( )

Q8. ___________ விளம்பேல்.

(1) உடையது
(2) இருப்பது
(3) துணிவது
(4) கெடுவது ( )

Q9. கற்றது கைமண்ணளவு ____________ உலகளவு.

(1) கற்காதது
(2) கலையாதது
(3) இல்லாதது
(4) கல்லாதது ( )

Q10. இயற்றலும் ஈட்டலும் ___________ காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(1) ஊட்டலும்
(2) ஊம்புதலும்
(3) காதலும்
(4) பணிதலும் ( )

www.testpapersfree.com

A3 அடைமொழி / எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. உடலை __________ செய்யக்கூடிய பல பயிற்சிகள் யோகாசனத்தில் உள்ளன.

(1) வளை
(2) வளைக்க
(3) வளைத்த
(4) வளைத்து ( )

Q12. மலேசியாவில் __________ நிலங்களும் மலைகளும் நிறைய உள்ளன.

(1) வளமான
(2) வலமாக
(3) வளம்
(4) வளமாய் ( )

Q13. __________ வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு விழாக்கால பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது.

(1) குறைந்து
(2) குறைந்த
(3) குறைத்து
(4) குறைய ( )

Q14. உண்மையான நண்பர்களே நம் குறைநிறைகளை __________ கூறுவார்.

(1) எடுக்க
(2) எடுத்து
(3) எடுத்த
(4) எடுத்தும் ( )

Q15. __________ தயாரிக்கப்பட்ட பட்டுப்புடவைகள் அதிக விலையில் கடைகளில் விற்கப்படுகின்றன.

(1) தரம்
(2) தரமான
(3) தரமாக
(4) தரத்தில் ( )

## A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

பரதன் முன்கோபக்காரன். அவனுக்குச் சட்டென்று கோபம் வந்துவிடும். அச்சமயம் அவன் காடுஞ்ச்சொற்களைப் பயன்படுத்தி தன் நண்பர்களை புண்படுத்துவான். அதனால் அவனது நண்பர்களில் பலர் அவனை விட்டு விலகியே இருந்தனர். நண்பர்களின் (Q16) ______________ அவனுக்கு வருத்தமளித்தது. இதனைக் கண்ணுற்ற அவன் தந்தை பரதனை அருகில் அழைத்து , " மகனே, (Q17) ______________ பொருளைக் கண்டால் எறும்புகள் அதனருகில் சென்று அதனை உண்கின்றன. அதுபோல் கனிவான இனிய சொற்களையே மனிதர்களும் விரும்புகின்றனர் என்பதை எடுத்துக் கூறினார். தந்தையின் அறிவுரையைப் பற்றி ஆழ்ந்து (Q18) ______________ பரதன், அன்று முதல் நண்பர்களிடம் கனிவாக பேசினான். கடுமையான வார்த்தைகளை (Q19) ______________ நிறுத்தினான். பரதனிடம் ஏற்பட்ட மாற்றத்தை அவனது நண்பர்களும் கவனித்தனர். மீண்டும் அவர்கள் பரதனிடம் நெருங்கிப் பழகினார். பரதனும் மகிழ்ந்து தன் தந்தைக்கு நன்றி கூறினான். (Q20) ______________ உள்ள அனைவரும் அன்பான கனிவான வார்த்தைகளுக்குக் கட்டுப்படுவர் என்பதை பரதன் அப்போது தான் புரிந்துகொண்டான். கோபமும் கடுஞ்சொற்களும் மனிதர்களிடம் பிரிவினையைத் தான் ஏற்படுத்தும் என்பதை சொல்லாமல் புரிந்துகொண்டான்.

Q16. (1) நட்பு
(2) போக்கு
(3) பேச்சு
(4) உறவு ( )

Q17. (1) கசப்பான
(2) சுவையான
(3) ருசியான
(4) இனிப்பான ( )

Q18. (1) பார்த்தான்
(2) கவனித்தான்
(3) சிந்தித்தான்
(4) உரைத்தான் ( )

Q19. (1) உச்சரிப்பதை
(2) உபயோகிப்பதை
(3) கத்துவதை
(4) எழுதுவதை ( )

Q20. (1) உலகில்
(2) ஊரில்
(3) வீட்டில்
(4) நிலத்தில் ( )

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

கிள்ளான் என்னும் ஊரில் மாதவன் என்னும் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் வேலைதேடி கோலாலம்பூருக்கு வந்தான். பலநாட்கள் வேலை தேடியும் ஒரு வேலையும் கிடைக்காததால் மாதவன் சோர்ந்து கவலையுடன் காணப்பட்டான். இரண்டு வருடங்களுக்கு முன் அவன் தந்தை இறந்துவிடவே அவன் தாயார் ரப்பர் தோட்டத்தில் வேலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. குடும்ப வறுமையால் மாதவன் தன் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு வேலை செய்து பணம் அனுப்புவதாக தன் தாயாருக்கு உறுதி கூறிவிட்டு வந்தான். தன் தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்படியாவது நிறைவேற்றவேண்டும் என்று எண்ணிக்கொண்டே ஒரு கோவில் வாசலில் அமர்ந்தான்.

பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. அவ்வேளையில் அங்கு வந்த ஒரு வாகனத்திலிருந்து பெரியவர்களும் சிறுவர்களும் இறங்கி கோவிலை நோக்கிச் சென்றனர். கோவிலுக்கு வெளியே தங்கள் காலணிகளைக் கழற்றி வைத்தனர். ஒரு மணி நேரம் கழித்து வெளியே வந்தவர்கள் தங்கள் காலணிகள் பத்திரமாக இருப்பதற்கு மாதவன் தான் காரணம் என்று அறிந்தனர். அவர்களில் ஒரு பெரியவர் அவனது முகத்தில் தெரிந்த பசியின் சோர்வைக் கண்டு ஐம்பது ரிங்கிட் பணம் கொடுத்தார். மாதவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

காலையில் பாத்து காசு இல்லாமல் வந்த தன்னிடம் தற்போது ஐம்பது ரிங்கிட் இருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியமாக இருந்தது. முதலில் தன் பசிக்குது தீனி போட்டுவிட்டு கோவில் நிர்வாக குழு தலைவரைக் கண்ணகி சென்றான். கோவில் வாசலில் விட்டுச் செல்வோரின் காலணிகளைத் தாமே பார்த்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டான். அச்சமயத்தில் கோவிலுக்கு வந்திருந்த ஒருவர் தன் காலணிகள் காணாமற் போயிருந்ததைக் சொல்லி நிர்வாகத்தினரிடம் புலம்பிக் கொண்டிருந்ததையும் கண்டான். அவனுடைய நல்ல நேரம் , கோவில் நிர்வாகத்தினர் மாதவனுக்கு அனுமதி அளித்ததோடு அல்லாமல் கோவிலுக்கு வெளியே ஒரு சிறு பகுதியை ஒதுக்கிக் கொடுத்தனர்.

ஆறே மாதங்களில் மாதவனது தொழில் முனேற்றப் பாதையை நோக்கிச் சென்றது. கோவிலுக்கு வரும் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களைப் பாதுகாக்கும் வேலையை கோவில் நிர்வாகத்திடமிருந்து பெற்று கவனித்து வந்தான். அவன் தன் அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியதோடு தன் அருகிலேயே தன் அம்மாவையும் வைத்து கவனித்துக்கொண்டான். மகனின் தொழில் வளர்ச்சி அவர்களின் வறுமையை

 www.testpapersfree.com

போக்கினாலும் மகனின் கல்வி பாதியிலேயே நின்றதை நினைத்து அவர் வருந்தினார். மாதவன் தன் கல்வியைத் தொடர்ந்து எப்படியாவது முடிக்க உறுதி பூண்டிருந்தான். தன் மகனின் மன உறுதியையும் அவனது உழைப்பையும் தாயார் பாராட்டினார். எந்த தொழிலிலும் ஒருவர் சிரிக்கலாம் என்பதை மாதவனின் வாழ்கை நமக்கு உணர்த்துகிறது அல்லவா!!!

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21 மாதவன் ஏன் சோர்ந்து காணப்பட்டான்?

(1) தந்தை இறந்ததால்
(2) டாக்டர் வேலைக்குச் சென்றதால்
(3) ஒரு வேலையும் கிடைக்காததால்
(4) படிப்பு தடைப்பட்டதால் ( )

Q22. மாதவனுக்கு எது ஆச்சரியம் அளித்தது?

(1) வாகனத்தில் பெரியவர்களும் சிறியவர்களுக்கு வந்தது
(2) காலணிகள் பத்திரமாக இருந்தது
(3) பெரியவர் 50 ரிங்கிட் பணம் கொடுத்தது
(4) தன்னிடம் பத்து காசு இல்லாதது ( )

Q23. மாதவன் ஏன் முதலில் நிர்வாகத்தினரைச் கண்ணகி சென்றான்?

(1) தனக்கு ஒரு வேலை தரும்படி
(2) வாகனங்களை பார்த்துக்கொள்வதற்கு அனுமதி பெற
(3) காலங்களை இறந்தவரின் புலம்பலைக் கேட்க
(4) காலணிகளை பார்த்துக் கொள்வதற்கு அனுமதி கேட்க ( )

Q24. எது மாதவனின் தாய்க்கு வருத்தமளித்தது?

(1) மகனின் தொழில் வளர்ச்சி அடைந்தது
(2) மகனின் கல்வி தடைபட்டது
(3) குடும்ப வறுமை நீங்கியது
(4) மகனுடன் வாழ்வது ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(2 மதிப்பெண்கள்)**

Q25. போக்கினாலும்

(1) நீக்கினாலும்
(2) அடைத்தாலும்
(3) சேர்த்தாலும்
(4) இருந்தாலும்

( )

[Type here]

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26. | தந்தை தாய் ________ என்பது ஔவையாரின் கூற்று. இன்றைய இளைஞர்கள் அதற்கேற்ப வாழ்கின்றனர். | Q26 (  ) |
| Q27. | சிறுவர்கள் கடற்கரையில் அழகான மணல்வீடு கட்டினர். அப்போது குறும்புக்காரர்கள் சிலர் அவற்றை ________ விட்டுச் சென்றனர். | Q27 (  ) |
| Q28. | அக்காலத்தில் மன்னர்கள் நாட்டை ஆண்டனர். அவர்கள் ________ தவறாத ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்தனர். | Q28 (  ) |
| Q29. | இராணுவ வீரர்கள் நாட்டுப்பற்று உள்ளவர்கள். பிற நாட்டு இரகசியங்களை ________ பார்த்து வருவதும் அவர்களின் பணிகளில் ஒன்று. | Q29 (  ) |

| | |
|---|---|
| (1) உளவு | (5) நெரி |
| (2) பேன் | (6) களைத்து |
| (3) நெறி | (7) பேண் |
| (4) கலைத்து | (8) உலவு |

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறித்தல்**

**D8 சுயவிடை கருத்தறித்தல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் தர்மா என்ற இடையன் வாழ்ந்து வந்தான்.அவன் மிகவும் நல்லவன். நேர்மையானவனாகவும், அறிவாளியாகவும் விளங்கினான். அவன் தனது ஆட்டு மந்தையைப் பார்த்துக்கொண்டு எளிமையாக வாழ்க்கை நடத்தி வந்தான். தர்மாவின் அறிவுத்திறனையும், நேர்மையையும் கண்ட கிராம மக்கள் அவனைத் தலைவனாக ஏற்றனர். மக்களின் நன்மைக்காகத் தர்மாவும் உழைத்து வந்தான். கிராம மக்களும் அவனை விரும்பிப் பாராட்டினார்.

அப்பகுதியை ஆண்டு வந்த மன்னன் , தர்மாவின் அறிவுத்திறனையும் , நேர்மையையும், திறமையையும் மற்றும் அவனுடைய நல்ல குணங்களையும் கேள்விப்பட்டான் . ஒருநாள், கிராமத்திற்கு வந்த மன்னன், தர்மாவைக் கண்டு பேசினான். தர்மாவுடன் பேசியதில் மிகவும் திருப்தி அடைந்த மன்னன் , அவனை ஒரு மாகாணத்தின் ஆட்சியாளராக நியமித்தான். தர்மாவும், அந்த மாகாணத்தின் நிர்வாகத்தை ஏற்று , திறம்பட ஆட்சி புரிந்து வந்தான். தர்மா, குதிரை மீது ஏறிச்சென்று கிராம மக்களுடைய குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்து வந்தான். அவன் குதிரையின் மீது செல்லும்போது தன்னுடன் ஒரு பெரிய பெட்டியையும் எடுத்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

நியாயமாக மக்கள் குறைகளைத் தீர்த்து வந்த தர்மாவின் புகழ் மென்மேலும் கூடியது. இதனால் பொறாமை உள்ளம் படைத்த சிலர், அவன்மீது விரோதம் காட்டியதோடு , அவனைப்பற்றி பலவாறு இகழ்ந்து பேசத்தொடங்கினர் . தர்மா நேர்மையற்றவன், வரிவசூல் செய்து, அந்தப் பணத்தைப் அரசுக்குத் தராமல் தானே வைத்துக்கொள்கிறான். அந்தப் பணத்தை எல்லாம் பெட்டியில்போட்டுப் பூட்டி, தன்னுடனே எங்குச் சென்றாலும் எடுத்துச் செல்கிறான் என்று பழி தூற்றியதோடு அல்லாமல் மன்னனிடம் சென்று தர்மாவின் மீது புகார் கூறினர்.

மன்னன் இதைச் சோதிக்க விரும்பி, தர்மாவின் மாகாணத்திற்குத் திடீரென்று சென்றான். தர்மா , பெரிய பெட்டியுடன் குதிரை மீது பயணம் செய்வதைக் கண்டான். சிலர் தன்னிடம் கூறிய புகார் உண்மையாக இருக்குமோ என்ற ஐயப்பாடு மன்னனுக்கு ஏற்பட்டது. பெட்டிக்குள் தங்கமும், வெள்ளியும் இருந்தால் தர்மாவைத் தண்டிக்கவேண்டும் என்ற முடிவுடன் மன்னன், தர்மாவை அணுகினான். மன்னனைப் பார்த்த தர்மா அவசரமாகக் குதிரையிலிருந்து கிழே இறங்கியபோது அவன் பேட்டியும் கிழே விழுந்தது. அதிலிருந்து அவனது பழைய அங்கியும் மண்ணில் விழுந்தது.வெள்ளியோ, தங்கமோ இல்லை.

மன்னன் வியப்புடன், " இது யாருடைய மேல் அங்கி ? எதற்காக இதை பெட்டியில் வைத்து நீ செல்லும் இடமெல்லாம் எடுத்துச் செல்கிறாய் ? " என்று

கேட்டான். அதற்கு தர்மா , " இது என்னுடைய மேல் அங்கிதான். நான் இடையனாக இருந்தபோது அணிந்திருந்த ஆடையைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். இதை நான் தினமும் பார்ப்பேன் . இது எனக்கு என் பழைய நினைவுகளைத் தரும். ஆடு மேய்த்து வாழ்ந்தபோது நேர்மையாக வாழ்ந்ததைப்போன்று என்றும் வாழவேண்டும் என்ற பாடத்தை இது எனக்குப் போதிக்கும் " என்று தர்மா பதிலளித்தான். தர்மலாவின் பதிலைக் கேட்ட மன்னன் மகிழ்ந்தான். தர்மாவின் நேர்மையைப் பாராட்டி மேலும் இரு மாகாணங்களின் நிர்வாகத்தை ஏற்குமாறு செய்தான். புகார் கூறியவர்களைத் கண்டித்தான்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.**
**( 22 மதிப்பெண்கள் )**

Q34. மக்கள் ஏன் தர்மாவைத் தலைவனாக ஏற்றனர் ? ( 2 மதிப்பெண்கள் )

Q35. மன்னன் தர்மாவை மாகாணத்தின் ஆட்சியாளராக நியமிக்க காரணம் என்ன ? ( 4 மதிப்பெண்கள் )

Q36. தர்மா எவ்வாறு தன் மாகாணத்தை நிர்வகித்தான்? ( 4 மதிப்பெண்கள் )

Q37. பொறாமைகொண்ட தர்மாவின் விரோதிகள் என்ன செய்தனர்? ( 3 மதிப்பெண்கள் )

Q38. பெட்டியுடன் தர்மாவைப் பார்த்த மன்னன் என்ன முடிவு செய்தான்? ( 3 மதிப்பெண்கள் )

Q39. தர்மா ஏன் பழைய அங்கியை உடன் எடுத்துச் செல்ல காரணம் என்ன?

[Type here]

( 3 மதிப்பெண்கள் )

Q40. உண்மையை உணர்ந்த மன்னன் என்ன செய்தான்? ( 3 மதிப்பெண்கள் )

****** முற்றும் *****

Comprehension same need to tye new compre

www.testpapersfree.com

# PAPER 10 CONCORD PRELIM

## தொடக்கநிலை 6

| | | |
|---|---|---|
| வி1) 2 | வி11) 4 | வி21) 3 |
| வி2) 4 | வி12) 1 | வி22) 3 |
| வி3) 3 | வி13) 2 | வி23) 4 |
| வி4) 2 | வி14) 2 | வி24) 2 |
| வி5) 1 | வி15) 3 | வி25) 1 |
| வி6) 2 | வி16) 2 | வி26) 7 |
| வி7) 4 | வி17) 4 | வி27) 4 |
| வி8) 1 | வி18) 3 | வி28) 3 |
| வி9) 4 | வி19) 2 | வி29) 1 |
| வி10) 3 | வி20) 1 | வி30) – |
| | | வி31) – |
| | | வி32) – |

www.testpapersfree.com

www.testpapersfree.com

34) மக்கள், தர்மாவின் அறிவுத்திறனையும், நேர்மையையும் கண்டனர். அதனால் அவனை தலைவனாக ஏற்றனர்.

35) தர்மாவின் அறிவுத்திறன், நேர்மை, திறமை மற்றும் நல்ல குணம் அனைத்தையும் மன்னன் கேள்வியுற்றான். நேரில் கிராமத்திற்கு வந்து தர்மாவுடன் பேசிய பிறகு மன்னன் முழு திருப்தி அடைந்தான். இதுவே மன்னன் தர்மாவை மாகாணத்தின் ஆட்சியாளராக நியமிக்க காரணம் ஆகும்.

36) தர்மா பொறுப்பை ஏற்று திறம்பட ஆட்சி புரிந்தான். மேலும் குதிரையில் ஏறிச் சென்று கிராம மக்களின் குறைகளை கேட்டு நியாயமாக நிவர்த்தி செய்தான். இவ்வாறு தர்மா மாகாணத்தை நிர்வகித்தான்.

37) பொறாமை கொண்ட தர்மாவின் விரோதிகள் அவனை பலவாறு இகழ்ந்து பேசியதோடு ~~பேசினர். மேலும்~~ அவன், நேர்மையற்றவன் வரிவசூல் செய்து அப்பணத்தை தானே வைத்துக்கொள்கிறான். மேலும் அதை பெட்டியில் போட்டு பூட்டி தன்னுடனே எடுத்துச்

www.testpapersfree.com

www.testpapersfree.com


செல்கிறான் என்றும்பழி தூற்றி, மன்னரிடம் புகாரும் செய்தனர்.

38) பெட்டியுடன் தர்மாவை பார்த்த மன்னன் மற்றவர் கூறிய புகார் உண்மையாக இருக்குமோ என சந்தேகப்பட்டான். அதனால் பெட்டியில் தங்கமும், வெள்ளியும் இருந்தால், தர்மாவை தண்டிக்க வேண்டும் என முடிவு செய்தான்.

39) தர்மா அங்கியை உடன் எடுத்துச் செல்ல காரணம் அதை பார்க்கும் போது பழைய நினைவுகள் வரும். ஆடு மாடு மேய்த்த போது எப்படி நேர்மையாக வாழ்ந்தேனோ அதை என்றும் கடைபிடித்து வாழவேண்டும் என்ற பாடத்தை அது எனக்கு போதிக்கும் என்பதற்கே ஆகும்.

40) உண்மையை உணர்ந்த மன்னன் தர்மாவின் நேர்மையை பாராட்டி மேலும் இரு மாகாணங்களை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். புகார் கூறியவர்களையும் கண்டித்தார்.

www.testpapersfree.com